அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 171

எனது இல. 2/9/771(எச்)
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7,
1980, யூலை மாதம் 24ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க யாக்கத் தலைவர்கள் யாவர்க்கும்.

வேலை நிறுத்தம்-1980, யூலை மாதம்-
வெற்றிடங்களை நிரப்புதல்.

1980, யூலை மாதம் 18ஆந் தேதி வெள்ளிக்கிழமையன்றோ அதன் பின்னரோ உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வரத் தவறியமையினால் அவர்கள் பதவியை விட்டு நீங்கியதன் விளைவாக ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பும்போது மேல்வரும் நடவடிக்கைமுறை மேற் கொள்ளப் படுதல் வேண்டும்.

(1) பதவியை விட்டு நீங்கியதனால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்குரிய நியமனங்கள் இயைபுள்ள அமைச்சரின்/மாவட்ட அமைச்சரின் அங்கீகாரத்துடன் செய்யப்படுதல் வேண்டும்.

(11) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப் பெற்ற நியமனமளிக்கும் அதிகாரி நியமனங்களை உறுதிப்படுத்துவதைக் காத்து, நியமனங்கள் அமய அடிப்படையிற் செய்யப்படுதல் வேண்டும்.

(111) கீழேயுள்ள (1V)இற்கு அமைய வெற்றிடங்கள் யாவும் இக் கிழமை இறுதியளவில் நிரப்பப் பெறுதல் வேண்டும்.

(1V) சகல வெற்றிடங்களும் நிரப்பப்பட வேண்டுமென இயைபுள்ள அமைச்சர் தீர்மானிப்பவற்றைத் தவிர்த்து, இயைபுள்ள அமைச்சரின்/மாவட்ட அமைச்சரின் தற்றுணிபின்படி மொத்த வெற்றிடங்களின் 90% நிரப்பப்படுதல் வேண்டும்.

02. இது தொடர்பில், நீங்கள் திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சின் செயலாளர் விடுத்த 1980, யூலை மாதம் 20ஆந் தேதியிட்ட இல. ஏ 110/2/ஜெசி ஐக் கொண்ட சுற்றறிக்கையையும் அவர் விடுக்கக் கூடிய ஏதும் மேல் அறிவுறுத்தல்களையும் கவனிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

ஒப்பமிட்டவர். பி. ஐ. குணதுங்க.
பதிற் செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.